# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.259/2023

Deposition of witness for Prosecution – PW-3

| | | | |
|---|---|---|---|
| Name | : உமா | Caste | : |
| W/o. | : சீனிவாசன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 31.10.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் ஓமலூர் தாலுகா ஆரூர்பட்டி கிராமம், பைப்பூரில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன மணி என்னுடைய அப்பா. அவர் லாரி டிரைவராக வேலை செய்து வந்தார். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும்.

எனது அப்பா சைக்கிள் ஸ்டாண்ட் குமார் என்பவரின் லாரியில் டிரைவராக வேலை செய்து வந்தார். 07.01.2023ம் தேதி காலை சுமார் 7.00 மணிக்கு லாரி லோட் ஏற்றுவதற்காக கருக்கப்பட்டி

செல்லவேண்டும் என்று குமார் கூப்பிட்டதால் அங்கு சென்றார். 07.01.2023ம் தேதியிலேயே மாலை 5 மணி அளவில் என்னுடைய அப்பாவை வெட்டி சைக்கிள் ஸ்டாணட் குமாரின் கிணற்றில் போட்டுள்ளதாக என் அம்மா எனக்கு போனில் தகவல் சொன்னார். நானும் என் அம்மாவும் போலிசாருடன் குமாரின் கிணற்றுக்கு சென்று பார்த்தோம். அப்போது கிணற்றில் என் அப்பா கை, கால்கள் வெட்டி எடுக்கப்பட்ட நிலையிலும், கழுத்து அறுக்கப்பட்டு தலை பாதி உடலுடன் பிணமாக கிடந்தார். பின்னர் தாரமங்கலம் தீயணைப்பு துறையினர் என் அப்பாவின் பிரேதத்தை கிணற்றலிருந்து எடுத்தார்கள்.

செல்லான் என்கிற செல்வராஜ் ரூ.200 பணம் என் அப்பாவிடம் கொடுத்து செல்போன் வாங்கி தர சொல்லி உள்ளார். என் அப்பாவிற்கு சரக்கு அடிக்கும் பழக்க்ம் உள்ளது. அதனால் என் அப்பா செல்லான் என்கிற செல்வராஜ்க்கு போன் வாங்கி தராமல் காலி டப்பாவை மட்டும் என் அப்பா செல்லானுக்கு கொடுத்துள்ளார் .அதை மனதில் வைத்துக்கொண்டு செல்லான் என்கிற செல்வராஜ் என் அப்பாவிடம் கொஞ்ச நாள் பேசாமல் இருந்துள்ளார். 07.01.2023ம் தேதி மாலை செல்லான் வீட்டிற்கு என் அப்பா சென்று பன்றி கறி சாப்பிட்டுவீட்டு சரக்கு அடித்துள்ளார். பின்னர் என் அப்பாவை செல்லான் கொடுவாள், மரம் அறுக்கும் மிஷினால் என் அப்பாவின் கை,கால்களை துண்டாக வெட்டி கழுத்தை அறுத்து என் அப்பாவை 6 துண்டுகளாக வெட்டி கிணற்றுக்குள் போட்டுவிட்டதாக ஊரில் பேசிக்கொண்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.